மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள குத்தகைதாரர்களுக்கு எல்லா விதமான பாதுகாப்பையும் இந்த அரசு கொடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 104, 105, 106, 107 ஆகியவை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

எடை, அளவுகள் சட்டத்திலுள்ள தண்டனை அளவை அதிகரிக்கும் திட்டம்.

*வினா எண். 194—திரு. செ. செம்மலை: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடை, அளவுகள் சட்டத்தில் உள்ள தண்டனை அளவை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமுலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த தண்டனை, குறைந்த அபராதம் என்று விதிப்பதால் எப்படி குற்றங்கள் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறதோ. அதேபோல இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற அலுவலர்கள் குறைவாக இருப்பதாலும் அதனை தீவிரமாக நடைமுறைப் படுத்த இயலாமல், குற்றங்கள் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, எனவே இந்தச் சட்டத்தினை நடைமுறைப் படுத்த கூடுதலாக அலுவலர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலும் உண்மை இருக்கிறது. குறைந்தபட்சம் 100 முத்திரை ஆய்வாளர்களும், 10 துணை ஆய்வாளர்களும் இருந்தால்தான் செம்மையாக நடைமுறைப்படுத்த முடியும் என்று கருதப்படுகிற காரணத்தால், அதை நிறைவேற்ற படிப்படியாக கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே இப்படி அதிகமாக தண்டனை விதிக்கின்ற வகையில் திருத்தங்கள் வேறு ஏதாவது கொண்டு வரப்பட்டிருக்கிறதா அல்லது இதுதான் முதன்முறையா என்று அறிய விரும்புகிறேன்.

1983, பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசே ஒரு விரிவான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக ஏற்கெனவே நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால் 79 லேயிருந்து அது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்த்தும் வரவில்லை. முதன்முறையாக தமிழகத்திலே இப்படிப்பட்ட ஒரு விரிவான திருத்தத்தை, எடையில் குறைவு செய்து ஏமாற்றுகிறவர்கள் அல்லது அதுபோன்ற குற்றங்குறைகளைச் செய்பவர்கள், இவர்களைக் கடுமையாக தண்டிக்கும் வகையில் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடைகளைக் குறைவாகக் காட்டும் வியாபாரிகளைப் பிடிப்பதற்காக புதியதாக அலுவலர்களை போடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ள பாமர மக்கள் வெளியிலே சென்று கடைகளிலேயிருந்து சில பொருள்களை வாங்கி விற்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தக் கடைகளிலே இருக்கும் வியாபாரிகள் எடைகளை—எடை அளவுக் கற்களை சரியாக வைத்திருப்பார்கள். ஆனால் எடையை நிறுத்துப்போடும்போது ஏதாவது ஏமாற்று செய்து, குறைவாக அந்தப் பாமர ஜனங்களுக்கு விற்று விடுகிறார்கள். அதை வாங்கி கொண்டு வந்து, அந்த கிராமத்து மக்கள் விற்கும்போது, இந்த அலுவலர்கள் எடை சரியாக இல்லை என்கிற காரணத்திற்காக, அவர்களை பிடிக்கும்போது, அந்த படிப்பறிவில்லாத கிராமத்து பாமர மக்களுக்கு தண்டனை அளிக்காமல், அவர்கள் வாங்கி வந்த அந்தக் கடை வியாபாரிகளுக்கு தண்டனை கொடுக்கும்படியான முறையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடை குறைவாக இருக்கும்போது தண்டனை கொடுப்பது இருக்கிற விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். தண்டனை மிகக் குறைவாக இருக்கிற காரணத்தாலே தப்பித்துக் கொள்ளலாம் பிறகு என்ற நம்பிக்கையோடு தவறுகளை வியாபாரிகள் சற்று அதிகமாகவே செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல சில வியாபாரிகளிடத்தில் எடை அளவுகள் சரியாகவே இருக்கும். ஆனால் தந்திரமாக ஏமாற்றுகிற பணியைச் செய்வார்கள். தராசில் வேகமாக பொருள்களை போடுவது மற்றும் சில ஏமாற்று வேலைகள் மூலம், எடைகளின் அளவு சரியாக வைத்திருந்தாலும், பொருள்களின் எடையைக் குறைத்துப் போடும் சாமர்த்தியம் அவர்களுக்கு உண்டு. இவர்களிடம் மக்களும் சற்று விழிப்பாகத்தான் இருக்கவேண்டும். இதுகுறித்து என்ன செய்யலாம் என்பதையும் அரசு பரிசீலிக்கும்.

[1983, பிப்ரவரி 9

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எடை போடும் கற்களை வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அந்த வருடத்திற்கு ஒரு முறை என்பதும், குறிப்பிட்ட ஒரு சமயத்தில் புதுப்பிக்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, அங்கேயுள்ள ஊழியர்கள் குறைவாக இருக்கிற காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் வருடத்திற்கு ஒரு முறை என்பதை இந்த தேதியிலிருந்து இந்த தேதி வரை என்று குறிப்பிட்டு மாற்றுவதற்கு அரசு உத்திரவு விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடைகளை ஒரு மாதத்தில் புதுப்பிக்க வேண்டும் என்பது நடைமுறையில் கண்டிப்பாக இயலாத காரியம் என்று அரசு உணருகிற காரணத்தால், வர இருக்கின்ற சட்டத் திருத்தத்திலே இதற்கும் தக்க மாற்றங்கள் கொண்டு வர அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

மதுராந்தகம் வட்டம் சீவாடி கூட்டுறவு சங்க கட்டிடம்.

*வினா எண். 195—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் சீவாடி கூட்டுறவு சங்க கட்டிடம் பயன்படுத்தப்படாமல் அதன் அலுவலகம் வேறு இடத்தில் செயல்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் சங்க கட்டிடத்திலேயே அதன் அலுவலகம் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) சங்க கிடங்கு கட்டிடத்திலேயே அலுவலகம் இயங்க இயலாது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க கிடங்குக் கட்டிடத்திலேயே அலுவலகம் இயங்க இயலாது என்று மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தற்போது இயங்குகிற அலுவலகம் மிராசுதார்கள் இருக்கின்ற பகுதியில் இருப்பதால் சாதாரண ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே சென்று அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அந்த அலுவலகத்தை வேறு இடத்தில் மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?